TO SHARE THE LIGHT

# தீபகச் சுடர்

சனவரி 2024

தீபம் 12 சுடர் 08

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



## செபமே வாழ்வு வாழ்வே செபம்

## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

### 01.01.2024 மரியாள் இறைவனின் தாய் பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. மாலா செபமாலை

2017ம் ஆண்டு புது விடியலின் வெள்ளிக் கீற்றாய் ஒளிர வருகையில், நாம் உரிய தயாரிப்புடன் வரவேற்போம். கன்னிமரியா இறைவனின் தாய் என மரியாவைப் போற்றியும், இயேசு என்னும் பெயரால் முதன் முதலாக அழைக்கப்பட்ட இறைமகனாம் இயேசுவைப் புகழ்ந்தும், களிப்புறும் நாள் இது. இவ்வாண்டின் துவக்கத்திலே எண்ணாகமம் 6:24-26இல் கூறப்பட்டது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டு இறையாசீரும், அருளும் பொழியப்படுவதை உணர்கிறோம். இப்படிப்பட்ட அருளும் ஆசீரும் ஆனந்தமும் இன்று மட்டுமிருந்து நாளை மறைந்து விடக்கூடியவை அல்ல. அப்படி மறைந்து விடும்படி நாம் நடந்து கொள்வதும் கூடாது. அன்னை மரியா போன்றே வாழ்வில் இறைவன் நமக்கு அருளும் கொடைகளை, அவர் நமக்கு செய்த நன்மைகளை, அவர் நமக்குக் காட்டும் வழிகளை மறந்துவிடாமல், அவற்றையே வாழ்நாள் முழுவதுமாகக் கடைப்பிடித்து நல்லதொரு வாழ்வை வாழ்ந்திட உறுதி கொள்வோம்.

பிறந்துள்ள 2017ம் ஆண்டானது நமக்கு மட்டுமல்ல, இவ்வுலக மாந்தர் அனைவரது வாழ்விலும் அமைதியை, நிறைவை, மகிழ்வைத் தரக்கூடிய ஆண்டாக விளங்கிட நமக்காக என்றும் பரிந்துரைக்க தயாராக இருக்கும் நம் இறைவனின் அன்னையான மரியாவின் மூலமாக இறைமகன் இயேசுவிடம் செபிப்போம். கடந்த ஆண்டு நடைபெற்ற வன்முறைகள், கசப்பான நிகழ்வுகள் பிறந்திருக்கும் புத்தாண்டில் நேராமல் இருக்க இறைவன் துணைபுரியவேண்டுமென்று மனதார மன்றாடுவோம். இவ்வாண்டு, நாம் வாழும் இப்புவியை கடும் இயற்கை சீற்றங்களினின்று கடவுள் காத்தருளுமாறும், தேவையான பருவ மழையையும் நல்ல விளைச்சலையும் தந்து நம் அனைவரையும் தம் அருளினால் நிரப்புவராக என்று இப்புதிய ஆண்டின் துவக்கத்தில் செபித்தும், நமது புனித வாழ்வுக்குத் தடையாயுள்ள தவறான சிந்தனைகள், கொள்கைகள், மதிப்பீடுகள், அணுகுமுறைகள், உறவுமுறைகள், செயல்பாடுகள் இவற்றை இனங்கண்டு வேரறுத்து ஒதுக்கி, நம் வாழ்வில் அன்பு, அருள், தூய்மை, வாய்மை, நேர்மை, சேவை, தியாகம், அர்ப்பணிப்பு போன்ற நற்பண்புகளால் அலங்கரித்து வாழ்வோம் என உறுதியளித்து, பக்தியோடு இன்றைய புத்தாண்டுத் திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

நான் உங்களுக்கு ஆசி வழங்குவேன் எனக்கூறிய இறைவா, கத்தோலிக்க திருச்சபையை வழிநடத்தும் எம் நேசமிகு திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார், வேதியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தத்தம் பணிகளுக்கேற்ப பொறுப்புகளையும் பகிர்ந்து செய்யும் ஆட்சியாளர்கள் தங்கள் பணிகளை பொதுநிலையினரிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்து அவர்களை ஊக்கப்படுத்தவும் அருள்புரியும்படி உம்மை மன்றாடுகிறோம்.

என்றென்றும் வாழும் இறைவா, எங்கள் வாழ்க்கையில் பணம், பதவி, அதிகாரம் இவற்றைக் கொண்டு சாத்தான் சோதிக்க வரும்போது அச்சோதனையில் வீழ்ந்துவிடாமல் பாதுகாத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

உரிமைப் பேற்றைத் தந்த உத்தமரே இறைவா, நீர் எங்களுக்கு அன்றாடம் செய்துவரும் நன்மைகளுக்கு நன்றி செலுத்தவும், இந்த நம்பிக்கையின் பலன்களை எங்கள் பிள்ளைகளுக்கு கற்பித்து ஞானவாழ்வில் அவர்களை வளர்க்கவும் அருள்புரியும்படி உம்மை மன்றாடுகிறோம்.

### 02.01.2024 புனிதர்கள் பேசில் மற்றும் கிரகோரி நசியான் திருப்பலி

**முன்னுரை** திருமதி. மாலா செபமாலை

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, புனித பெரிய பசிலியார் மற்றும் புனித கிரகோரி நசியான் ஆகிய இருவரின்திருநாளாக இன்றைய தினத்தை திருஅவை அறிவித்துள்ளது. கத்தாசியாவைச் சார்ந்த ஆயர்களான இவர்கள் இருவருமே கத்தோலிக்க திருஅவையின் அடித்தளமான தூய தமத்திரித்துவம் என்னும் மூவொரு கடவுளைப்பற்றிய தெளிவான கருத்துக்களை

மக்களிடம் எடுத்துரைத்து அவர்களை தூய தமத்திரித்துவ நம்பிக்கையில் ஆழப்படுத்தியவர்கள் காற்றுக்கு கண்கள் இல்லை எல்லோரையும் சந்திக்கும் கால்கள் இல்லை எல்லா இடங்களுக்கும் செல்லும் கரங்கள் இல்லை எல்லோரையும் தழுவிக்கொள்ளும் வாய் இல்லை, எல்லா மொழிகளிலும் பேசும் பொய்கையில் குளித்துப்போகும் பூக்களில் மணம் வீசும் புல்லாங்குழலில் இசையாகும் என்பார் ஒரு புதுக் கவிஞர். காற்றாய் எங்கும் கலந்துப் போயிருக்கின்ற நம் மூவொரு இறைவனின் இதயத்தோடு நமது இதயத்தை இணைய வைப்பதற்கு அவருடைய குரலான நற்செய்தி நூலை கருத்துடன் வாசிப்பதே ஒரே வழி என்று உணர்ந்து அதை ஆழமாய் கற்றுத்தேர்ந்து அதன்வழி நம்மை அர்ப்பணித்தவர்களே இவ்விரு புனிதர்கள் என்றுரைத்தால் அது மிகையாகாது.

புனித பெரிய பசிலியார் மற்றும் புனித கிரகோரி நசியான்சன் ஆகிய இவ்விரு ஆயர்கள், மறைவல்லுநர்களை நினைத்து இறைவனுக்கு நன்றி கூறும் நாம் அவர்களின் அறிவுரைகளை அறச் சின்னங்கள் அனைத்தையும் நம் வாழ்வுக்கான உரமாக்குவரே அவசியம் மற்றும் அவசரத் தேவையாகின்றது என்பதை உணர்ந்துக் கொள்வோம். மேலும் "என்றும் வேண்டுவது அமைதியையே என்ற அவர்களது இலட்சிய மனக்காட்சி அறிக்கைகளை கருவிகளாகவும் அதே வேளையில் திருஅவை வளர்ச்சிக்கு தடையாக முடிவுகளை எடுத்த மன்னன் வாலன்சை கடுமையாக எச்சரித்த துணைவை கேடயமாகவும் நிறுத்தி இவ்விருவரும் ஏழைகளின்மீது கொண்டிருந்த அன்பு, அக்கறை, பரிவு, நேயம் அகியவற்றை நமதாக்கி புதியதாய் பிறக்க உறுதியேற்போம். உன் வீட்டில் உமது தேவைக்குமேல் எஞ்சியிருக்கும் உணவுப் பொருள் உனதல்ல அது ஏழைக்கும், இல்லாதோறுக்கும், இயலாதோருக்கும் உரியது என்று மக்களிடம் துணிச்சலாக எடுத்துக்கூறி அவர்களை மூவொரு இறைவனின் மீதான பக்தியில் மட்டுமல்லாமல் எளிய மக்களின் மீதான இரக்கத்திலும், வாழ நம்மை அழைத்த இப்புனிதர்களைப்போல் மக்களின் மீதான இரக்கத்தினாலும், நாங்கள் வாழ வளர இத்திருப்பலியில் இணைவோம், இறையாசீரைப் பெற்று மகிழ்வோம், ஏழைகளின்மீது அன்புக் கொள்வோம்.

**07.01.2024 திருக்காட்சி பெருவிழா** **திருப்பலி**

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

இறையேசுவின் இனிய திருக்குலமே, இன்றைய தினம் பாலகன் குழந்தையேசுவிற்கு காணிக்கைகளைக் கொணர்ந்து, உண்மை இறைவன் உலகின் ஒரே இறைவன், அரசர் என்பதை வெளிச்சம் போட்டு காட்டவே வெவ்வேறான திசைகளிலிருந்து வானில் ஒளிரும் விண்மீனின் உதவியோடு ஒன்று கூடி ஆண்டவரை காணவந்த திருக்காட்சி பெருவிழாவைத்தான், திருஅவை நம்மை சிறப்பிக்க அழைக்கின்றது. கடவுள் தங்களுக்கு மட்டுமே உரித்தானவர் என்று எண்ணிவந்த யூதமக்களுக்கு இந்த திருவிழாவில் உள்ள உண்மை அதிர்ச்சியை தந்திருக்கும். காரணம் வானதூதர் வழியாகவும், எரியும் புதர் வழியாகவும், தங்களுக்குத் தோன்றி பத்து கட்டளைகள் என்னும் மகத்தான வாழும் வழிமுறையைக் கொடுத்தார் என நம்பி தங்களை மட்டுமே இறைமக்கள் என பறைசாற்றிய யூத மக்களுக்கு கீழை நாடுகளைச் சேர்ந்த மூன்று நாடுகளின் ராஜாக்களுக்கு கடவுள் தன்னை வெளிப்படுத்திக்கொண்டார் என்ற செய்தி அதிர்ச்சியான செய்திதான்.

அதிலும் மூன்று ராஜாக்களில் ஒருவர் கருப்பின மக்களின் தலைவர் கஸ்பார் என்னும் அரசர். முற்ற இரு அரசர்களின் மெல்காயர், பல்தசார் என்பவராவார்கள் அரச மரியாதை காணிக்கையான பொன், சாம்பிராணி, வெள்ளைப்போளம் என்றும் பொருள்களை குழந்தை இயேசுவிற்கு காணிக்கையாக்கியவர்கள். பொதுவாக ஆண்டின் முதல் ஞாயிறு மூன்று அரசர்கள் திருவிழா ( ) என கொண்டாடப்படுகிறது. அன்றுதான் மூன்று அரசர்களின் உருவபொம்மையை மக்கள் குடிலில் வைத்து சிறப்பிப்பார்கள். குழந்தையை சந்தித்தப்பின் இவர்கள் ஏரோதுவிற்கு பயந்து வேறுவழியாக தங்கள் நாட்டை அடைந்தார்கள் என்பதும் வரலாறு உணர்த்தும் செய்தி.

விவிலிய ஆராய்ச்சியாளர்களின் இந்த மூன்று ஞானிகளான அரசர்கள், வானில் ஒளிரும் புதிய விண்மீனை கண்டு அதனை அறிய வந்தவர்கள், ஆசியாவில் குறிப்பாக இந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்றும் கூறுகிறார். எது எப்படியோ நமக்காக பிறந்த இறைவனை அனைவரும் தரிசிப்போம், வாழ்த்துவோம், வணங்குவோம் என்ற அர்ப்பணிப்போடு இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

பரம்பொருளே எம் இறைவா, எளியோர்களுக்கான நம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவற கன்னியர் மற்றும் அனைத்து திருநிலையினர் அனைவரும் நம்மிடையே பிறந்த பாலகன் இயேசு அனைத்துலக மக்கள் மனமகிழ்வோடு கண்டு மகிழ்வதுபோல் இவர்களின் வாழ்விலும் நீர்குடிக்கொள்ள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

மானிட இனத்தில் தெய்வக்குழந்தையாக அவதரித்த இறைவா, உம்மை ஆராதிக்கிறோம், துதிக்கிறோம், போற்றுகிறோம், இயற்கை பேரிடர்கள், போர்கள், ஒற்றுமையின்மை, பேரழிவு நோய்கள் இவற்றிலிருந்து எங்களை விடுவித்து பாதுகாக்கின்ற உம் கருணை உள்ளத்தைப்போன்று நாங்களும் எங்களிடையே உள்ள போட்டி, பொறாமை போன்றவற்றிலிருந்து எங்களை மாற்றி உமக்கேற்ற பிள்ளைகளாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

அனைத்துக் குற்றங்களையும் மன்னிக்கும் மனம் படைத்தவரே எம் இறைவா, குடும்பங்களில் நிகழும் வன்முறைகள், சந்தேகத்தினால் ஏற்படும் விபரீத படுகொலைகள், குடும்பங்களில் ஏற்படும் பிளவுகள், கடன் தொல்லைகள், தீயபழக்க வழக்கங்கள் இவைகளிலிருந்து விடுவித்து, மன்னித்து உம் பாதையில் எங்களை வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**14.01.2024 பொதுக்காலம் இரண்டாம் ஞாயிறு** **திருப்பலி**

பொதுக்காலம் 2ம் ஞாயிறு மற்றும் அருளாளர் தேவசகாயம் பிள்ளை அவர்களின் நினைவு நாளைத் திருச்சபை இன்று கொண்டாடுகின்றது. "அழைக்கப்பட்டவர் பலர், தேர்ந்துக்கொள்ளப்பட்டோர் சிலர்" என்பது இறைவார்த்தை. இறைவனின் அழைப்பிற்கு நாம் செவிமடுக்கின்றோமா? என்பதை இன்று சிந்திப்போம். இன்றைய முதல் வாசகத்தில் இறைவன் சாமுவேலை அழைத்தபோது சிறுவனுக்கு யார் அழைத்தது என தெரியவில்லை. இறைவாக்கினர் ஏலியின் உதவியால் சாமுவேல் அறிந்துக்கொண்டார். நற்செய்தியில் இரு சீடர்களை இயேசு அழைக்க அவர் பின்னே செல்கின்றனர். மேலும் அச்சீடருள் ஒருவர் தனது சகோதரரான சீமோனை இயேசுவிடம் அழைத்துச் செல்கிறார். இவர்கள் அனைவரும் மறுமொழிக் கூறாமல் இயேசுவைப் பின்பற்றினார். பின்நாளில் சீமோன் இராயப்பரையே இயேசு திருச்சபையின் தலைவராக நியமித்தார்.

அதுபோலவே நாமும் இறைவனின் குரலுக்கு காத்திருப்பவராக தயார் நிலையில் இருக்க வேண்டும் என்பதை இன்றைய வாசகங்கள் விளம்புகிறது. நமது இந்திய தேசத்தில் கேரள மாநிலத்தில் பிறந்து புறவினத்தாராய் இருந்தும் இறைவனின் குரலுக்குச் செவிசாய்த்து இறையேசுவைப் பின்பற்றி வாழ்ந்து அநேக அதிசயங்களை அருங்குறிகளைப் புரிந்து இறைசாட்சியாய் விளங்கி அருளாளர் எனும் உயரிய நிலைக்கு உயர்த்தப்பட்டார் அருளாளர் தேவசகாயம் பிள்ளை. இறைவனின் அழைப்பை ஏற்பவர்களாகவும், ஏற்ற அழைப்பில் நிலைத்து நிற்பவர்களாகவும் வாழும் வரமருளவேண்டி இத்திருப்பலியில் இணைந்து செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

அன்புத் தந்தையே இறைவா, எமது திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை அவர்களின் ஆன்ம சரீர நலன்காத்து அவர் தம் மக்களைத் தொடர்ந்து விசுவாச வாழ்வில் வழிநடத்தவும், ஆண்டவரின் பிரதிநிதியாய் நீதி நேர்மையோடு அஞ்சாமல் செயலாற்றவும் உடன் பணியாளர்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தாரைப் பாதுகாத்து இறைப்பணியினைத் தொய்வின்றி நடத்த வேண்டிய அருளைத்தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

அன்பு தந்தையே இறைவா, எம் பங்குத்தந்தை எடுக்கும் ஒவ்வொரு நன்முயற்சியும் வெற்றியாய் அமைந்து பங்கு வளர்ச்சி பெறவும், மக்கள் மன மகிழ்வுடன் அவரோடு இணைந்து செயலாற்றவும், ஆலய விஷேச நாட்களிலும் மற்ற நாட்களிலும் மக்கள் அதிகளவில் பங்கேற்று இறையாசீரைப் பெறவும், இறைவன்தாமே ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

அன்புத் தந்தையே இறைவா, எம் பங்கு மக்கள் இறைவனின் அழைப்பை அறியவும், தங்களின் ஞானத்தையும், விசுவாசத்தையும் காத்துக்கொண்டு தகுந்த நேரத்தில் இறைப்பணியாற்றிடவும், தங்கள் பிள்ளைகள் உலக ஆடம்பர வாழ்வை பின்பற்றாமல் கிறிஸ்துவின் மாதிரிகளைக் கைக்கொண்டு நல்ல எதிர்காலத்தை அமைத்துக்கொள்ள வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

அன்பு தந்தையே, ஆட்சியாளர்கள் தங்கள் நலனில் மட்டுமே நினைவில் கொண்டு, மழை வெள்ளத்தால் விலையேற்றத்தால் டெங்கு போன்ற கொடிய ஆட்கொல்லி நோயால் எத்தனை உயிர்கள் மாண்டாலும் கவலைப்படாதவர்களாய், குழப்பமான அரசியல் சூழல், அனைத்து தொழில், வேலை, வியாபாரம், விவசாயம் நலிவடைந்து சாதாரண மக்கள் வாழ தகுதியற்ற நிலைக்குள்ளாகியுள்ளனர். இந்நிலைமாறி மக்கள் நலனில் அக்கறைக் கொள்ளும் மனிதநேயமுள்ள தலைவர்கள் அமைந்து நல்லாட்சி மலர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

அருளாளர் லூயிஸ் வரியாரா

## 21.01.2024 பொதுக் காலம் மூன்றாம் ஞாயிறு  திருப்பலி

**முன்னுரை**

I. யோவா 3: 1-5,10    II. 1கொரி. 7:29-31    மாற்கு 1: 14-20

கிறிஸ்துவில் பேரன்புமிக்க சகோதர சகோதரிகளே, நமது தாய்த்திருச்சபை இன்று பொதுக்காலம் மூன்றாம் ஞாயிற்றுக்கிழமையைச் சிறப்பித்துக் கொண்டிருக்கிறது. இன்றைய முதல் வாசகத்தில் மனம்மாறுதல் என்பது பழைய பாவ வாழ்க்கையை விட்டுப் புதிய தூய்மையான வாழ்வுக்கு வருதல், இதன்மூலம் இயேசுவின் வழியாக இறைவனின் கருணையில், பராமரிப்பில், மன்னிப்பில், நம்பிக்கைக் கொள்ளுதல் என்பதைக் குறித்துப் படிக்கின்றோம். ஆண்டவரின் இரக்கத்தின் மூலம் நினிவே மக்கள் தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்கிறார்கள்.

இரண்டாவது வாசகத்தில் இந்த உலகம் நினையில்லாதது. மறுவுலக வாழ்வு மட்டுமே நிலையானது என்பதையும் இயேசுவின் இறையாட்சியை மட்டுமே நாம் எதிர்நோக்கி நம்பிக்கையுடன் நடைபோட வேண்டும் என்று நாம் படிக்கிறோம். இன்றைய நற்செய்தியில், "என் பின்னே வாருங்கள், நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்" என்று சீடத்துவத்திற்கு இயேசுவிடும் அழைப்பு. மிகவும் நாசுக்காகவும், நளினமாகவும் குறைவான வார்த்தைகளில் விவரிக்கப்பட்டுள்ளது. இயேசுவின் சீடத்துவம் என்பது அன்றைய யூத மதபோதகர்களின் சீடத்துவத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டிருந்தது. யூத மத போதகர்களைத் தேடித்தான் சீடத்துவத்திற்கு மக்கள் செல்வதுண்டு. ஆனால் இயேசு தான் விரும்பும் மக்களை தன் சீடர்களாக்க அவர்களைத் தேடிச் செல்கிறார். இயேசுவின் சீடத்துவம் படிப்பு, கௌரவம், செல்வாக்கு அந்தஸ்து இவைகளைத் தகுதிகளாகக் கொள்ளாது, உலக ஈடுபாடுகளில் பற்றின்மை, பொதுநலம் இவையே தேவையான தகுதிகளாக உள்ளன. இறைவனின் அழைப்புக்கு முரண்பட்டு வாழாமல் அவரது அழைப்புக்கு ஏற்றவாழ்வு வாழ வரம் வேண்டி நாம் இத்திருப்பலியில் இணைவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

வரங்களைப் பொழியும் அன்புத் தந்தையே, எம் திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் மற்றும் பொதுநிலையினர் அனைவருக்கும் புதிதாக பிறந்திருக்கும் இந்த ஆண்டில் மக்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய கொடைகள் மற்றும் வளங்களைக் குறித்து சிறந்த திட்டமிடுதலுடன் செயல்படும் ஞானத்தை அருளுமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

நலன்கள் அனைத்திற்கும் ஊற்றான இறைவா, எம் நாட்டுத்தலைவர்கள், அதிகாரிகள் அனைவரும் எங்களது தேவைகளை நிறைவு செய்வதில் அக்கறைக்காட்டவும், எங்கள் ஆற்றல்களுக்கு மதிப்பளித்து உற்சாக மூட்டவும் காலச்சூழல்களுக்கு ஏற்ப எங்களைச் சிறப்பாக வழிநடத்தவும் அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

உறவின் ஊற்றே எம் இறைவா, உதவித் தேவைப்படும் நிலையிலுள்ள எம் சகோதர சகோதரிகள் குறித்து பாராமுகமாக இருக்காமல் நமக்கு இறைவன் கொடுத்துள்ள செல்வங்களை, பொருட்களை ஏழை எளிய மக்களுடன் பகிர்ந்து வாழும் மனம் அருள உம்மை மன்றாடுகிறோம்.

பரிவுள்ளம் கொண்ட இறைவா, இன்றைய கணிப்பொறிக்கால மனிதன் மனிதநேயம் அற்றவனாகவும், பிறர் துன்பத்தைக் கண்டுக்கொள்ளாதவனாக மட்டுமல்ல அதில் இன்பம் காண்பவனாகவும், பிறர்மீது

அக்கறையற்றவனாக, பொறுப்பற்றவனாக, வாழும் சமுதாயத்தை மனமாற்றம் அடையச்செய்ய வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**22.01.2024 அருளாளர் லவுரா விக்குகூஞா திருப்பலி**

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

அருளாளர் லவுரா விக்கூஞா சான்டியாகோவில் ஜோஸ்டொமிகோ மற்றும் மெர்சிடியஸ் பினோ ஆகியோருக்கு பிறந்தார். இவரது தந்தை ஜோஸ்டொமிகோ ராணுவத்தில் பணிபுரிந்து வந்தார். அப்போது ஏற்பட்ட புரட்சியின் காரணமாக சான்டியோவிலிருந்து வெளியேற்றப்பட்டு கோவிலில் தஞ்சம் புகுந்தது. ஆனால் லவுராவின் தந்தை திடீரென இறந்தார். லவுராவின் தாய் மெர்சிடிஸ் தனது இரண்டு பிள்ளைகளுடன் அர்ஜென்டாவில் வாழ சென்றார். மெர்சிடிஸ் தனது இரண்டு மகள்களின் கல்விக்கு நிதியளிப்பதற்காக வழியைத்தேடி மெர்சிடிஸ் விடுதியின் உரிமையாளரான மனுவல் என்பவரிடம் வேலைக்குச் செல்ல முற்பட்டார். தங்களின் பிள்ளைகளின் கல்வியைத் தொடர தன்னுடைய வேலையினால் கிடைத்த நிதியுதவி அவருக்கு உதவியாக இருந்தது. லவுரா விக்குனாவிற்கு அப்போதைய சலேசிய கன்னியர்கள், கிறிஸ்தவர்களின் சகாய அன்னையின் மகளிர் இல்லத்தில் கல்விப்பயிலும் வாய்ப்பினைப் பெற்றார். கன்னியர்களின் பராமரிப்பில் கத்தோலிக்க நம்பிக்கையில் ஆழ்ந்த அக்கறை காட்டினார். கல்விக்கூடத்திலுள்ள தேவாலயத்தில் செபிப்பதில் அதிக நேரம் செலவழித்தார். தானும் ஒரு அருட்சகோதரியாக வேண்டுமென்ற மிகுந்த ஆவலைக் கன்னியர்களிடம் தெரிவித்தார்.

பள்ளி விடுமுறையில் வீட்டிற்கு வந்தவுடன் தான் கன்னியராக வேண்டுமென்ற விருப்பத்தை தன் தாயிடம் தெரிவித்தாள். இதைக் கேள்வியுற்ற விடுதி முதலாளியால் மிகவும் கொடுமையாக துன்புறுத்தப்படுவதோடு தனது தாயிடம் மனுவேல் மோரா கொண்டுள்ள தகாத உறவைக் கண்டும் மிகவும் மனவேதனை அடைந்தாள். மேலும் மோரா லாவுராவை கடுமையாக அடித்துத் துன்புறுத்தியதுடன் அவர்களின் படிப்பிற்கான செய்துவந்த பணவுதவியையும் நிறுத்தினார். இதனையறிந்த கன்னியர்கள் லவுராவிற்கும் அவளின் சகோதரிக்கும் உதவிசெய்ய முன்வந்தனர். லவுரா புனித டோமினிக் சாவியோவின் உறுதிமொழியை "பாவம் செய்வதைவிட சாவதேமேல்" என்பதை தானும் கடைப்பிடிக்க வேண்டுமென்று மனுவேலின் தீய எண்ணங்களிலிருந்து பலமுறை தன்னைக் காத்துக்கொண்டாள். தன் தாயின்பாவ வாழ்க்கையை எண்ணி மிகவும் வேதனையடைந்து, தன் தாயின் மனமாற்றத்திற்கா தன் உயிரைவிடவும் கொடுக்கவும் முடிவு செய்தாள். காலம் செல்லச்செல்ல நுறையீரல் காசநோயால் மகிவும் மோசமாக பாதிக்கப்பட்டதுடன், முன்பு மோரால் உடல் உபாதைகளால் மிகவும் பலவீனமடைந்தாள். தான் இறப்பதற்குமுன் "அம்மா நான் உனக்காக உயிரைக் கொடுக்க இறைவனிடம் கேட்டேன், தற்போது காசநோயால் இறக்கப்போகிறேன், அதற்குமுன் எனக்கு நீங்கள் விடுதி உரிமையாளருடன் நடத்தும் தவறான வாழ்க்கையை விட்டு, தூய்மையான வாழ்க்கை வாழ வேண்டுமென்று கேட்டுக்கொண்டாள். அவள் தாயும் அழுதுக் கொண்டே, இனி அப்படி தவறான வாழ்க்கையை வாழவில்லை என்றும் சத்தியம் செய்தாள்.

இதைக்கேள்வியுற்ற லவுரா மிகவும் மகிழ்ச்சியோடு இறைவனுக்கும் அன்னை மரியாளுக்கும் தன் அம்மாவிற்கும் நன்றிக்கூறி தனது தாயின் இரட்சிப்பிற்காக தன்னுடைய உயிரையும் கொடுத்தார். லவுராவின் பழமொழிகளில் மிக முக்கியமான ஒன்று, "அமைதியாக துன்பப்படுங்கள், மற்றும் எப்போதும் புன்னகையோடு இருங்கள்" என்பது. 1891ம் ஆண்டு ஏப்ரல் 9ல் பிறந்த இவர் 1904 ஜனவரி 22 நாள் இறந்தார். லவுரா விக்கூஞாவிற்கு திருத்தந்தை ஜான் இரண்டாம் பவுல் அவர்களால் அருளாளர் பட்டம் கொடுக்கப்பட்டது. இவரின் நினைவுநாளை சிறப்பிக்கும் நாம் துன்பங்களை பொறுமையுடனும், அமைதியுடனும், மனமகிழ்வுடனும் ஏற்றுக்கொண்டு வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், மறைப்பரப்பு பணியாளர்கள் அனைவரும் தூய ஆவியாரின் வல்லமையால் நிரப்பப் பெற்று தங்களின் பணிவாழ்வில் வருகின்ற துன்பங்கள், இன்னல்கள், சோதனைகள்

இவைகளிலிருந்து முழுமையாக விடுபட்டு தங்களின் மறைப்பணியில் என்றும் நிலைத்து உழைத்திட இறவைா உம்மை மன்றாடுகிறோம்.

தூய்மையே உருவான இறைவா, நாங்கள் சோதனையில் விழும் நேரங்களில் புனிதர்களின் வாழ்க்கை முறையும், அவர்களின் உற்சாகமான பொன்மொழிகள் எங்களுக்கு முன்மாதிரியாக இருக்கவும் அதனை கடைபிடிக்கவும் வேண்டிய அருளைத்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

வாழ்வளிக்கும் வள்ளலே எம் இறைவா, இன்றைய நினைவுநாளை சிறப்பிக்கும் அருளாளர் லவுரா விக்கூஞாவைப்போல இறையன்பிலும், பிறரின் நல்வாழ்விற்காக துன்பப்படவும் தியாகங்கள் செய்யும் தாராள மனதையும் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**24.01.2024 புனித பிரான்சிஸ் சலேசியார் திருப்பலி**

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

இன்று புனித பிரான்சிசு சலேசியார் விழாவை நாம் இணைந்து கொண்டாட கூடியுள்ளோம். தமது சினத்தை அதாவது அதீத கோபத்தை முற்றிலும் நீக்கவே இருபது ஆண்டுகள் ஆயிற்று என சொன்னவர் தான் இன்று உலகம் போற்றும் உத்தம புனிதராக கொண்டாடப் படுகிறார் . இவர் பிரான்சு நாட்டில் உயர் குலத்தில் பதிமூன்று குழந்தைகளில் முதல் குழந்தையாக பிறந்தவர். இவரது தந்தை இவரை சட்டம் படிக்க வைத்து உலகிலேயே உயர்ந்த பதவியில் இவரை அமர்த்த திட்டம் தீட்டி இருந்தார்.அதற்காக பதுவை நகர் பல்கலை கழதத்திற்கு அனுப்பி வைத்தார். தந்தையின் கனவை தவிடு பொடியாக்கி குருத்துவத்தை தேர்ந்து கொண்டார். இவர் கவனத்துடனும் திறமையுடனும் எழுதிய மறை விளக்க நூல்கள் பல. மற்றும் இவரது போதனையால் தப்பறை கொள்கைகளை உடைய பலரை மனம் திரும்ப வைத்தது. அடுத்து ”கடவுள் மீது அன்பு”என்ற நூலை எழுதி முடிக்க பத்து ஆண்டுகள் ஆயின.

திருத்தந்தை 23 ம் அருளப்பர் இப்புனிதரை தம் வாழ்நாளெல்லாம் முன்மாதிரி கொண்டு வாழ்ந்தார். பலமுறை இவரது வாழ்க்கை வரலாற்றை படித்துள்ளேன். அவரது அறிவுரைகளும் தாழ்ச்சி, சாந்த குணம், அமைதி நிறைந்த முன்மாதிரி களும் எனக்கு தனியாத தாகத்தை ஏற்படுத்தியது. அது எனது சாதாரணமான வேலைகளையும் மிகுந்த மேலான நோக்கத்தோடு நேர்த்தியாக செய்ய முடிகிறது என தனது குறிப்பில் எழுதி வைத்துள்ளார் திருத்தந்தை.

ஒரு பீப்பாய் நிறைய புளித்த காடியை வைத்தாலும் ஈக்களை ஈர்க்காது.ஆனால் ஒரு கரண்டித் தேன் பல ஈக்களை ஈர்க்க முடியும் என்பது இவரது விருதுவாக்காக அமைந்திருந்தது.இப்பேர்பட்ட உயர்ந்த புனிதரை நாம் பெற்றிருப்பது நமக்கெல்லாம் பெருமை இப் பெருமையை நாம் தக்க வைக்க திருத்தந்தை 23 ம் அருளப்பரைப் போல் இப் புனிதரை முன் மாதிரியாக கொண்டு வாழ்ந்து இறை இயேசு வழி நடப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டுகள்**

தாயும் தந்தையுமான இறைவா இப் புனிதரை கொண்டாடும் எம் திரு அவை அருட்பணியாளர்கள் அனைவரும் இவரை முன்மாதிரியாக கொண்டு வாழ்ந்து திரு அவையை வழி நடத்த வேண்டிய அத்தனை வரங்களையும் அளித்திட உம்மை மன்றாடுகிறோம்

வல்லமையே இறைவா இப் புது வருடத்தில் அனைத்தும் புதிதாக வேண்டும் என எண்ணுகிறோம் அதற்கு தகுந்த முறையில் எம்மை தயாரிக்க வேண்டும் இப் புனிதரின் செயல்கள் ஒவ்வொன்றையும் எண்ணிப் பார்த்து அதனை கை கொண்ட வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்

வாரத்தையான இறைவா உணவுத் தொட்டியில் பிறந்ததே என்றும் நீர் எமக்கு ஆற்றல் தரும் உணவு என ”நானே உணவு ” என்றீரே இதனை அடையாளம் காட்டவே என அறிந்து உவகை கொண்டு உலக மக்கள் அனைவரும் ஒரே அப்பத்தை உண்டு ஒரே கிண்ணத்தில் பருகி எல்லோரும் ஒன்றாக இருப்பார்களாக என்ற உமது வாக்கை நிறைவேற்றும் வரம் தாரும் என உம்மை கெஞ்சி மன்றாடுகிறோம்

**25.01.2024 புனித பவுல் மனமாற்றம்** **திருப்பலி**

**முன்னுரை** திருமதி. மாலா செபமாலை

இறையேசுவின் அன்பு இறைமக்களே, இன்று நாம் புனித சவுல் பவுலான விழாவினைச் சிறப்பிக்கின்றோம். இவர் சிலிசியா இப்பொழு துருக்கி என்றழைக்கப்படும் இந்நாட்டில் தர்சு என்னுமிடத்தில் இயேசு வாழ்ந்த காலத்தில் பிறந்தார். முதலில் இவர் சவுல் என அழைக்கப்பட்டார். இளமையில் மிகவும் அறிவில் சிறந்த மாணவனாக இருந்தார். எபிரேய மொழியிலும் யூத மதத்திலும் சிறந்த மாணவனாகத் திகழ்ந்தார். இவர் ஒரு பரிசேயர். இவரது தொழில் கூடாரம் அமைத்துத் தருவது. இவர் கிறிஸ்தவ மதத்தையும் கிறிஸ்தவ மக்களையும் ஆவேசத்துடன் எதிர்த்தார். யூத மதத்தின்மீது கொண்ட பற்றினால் கிறிஸ்தவ மக்களை சிறையில் அடைத்து சித்தரவதை செய்து அநேக மக்களைக் கொன்றழித்தனர்.

இறையேசுவில் நிறையன்புள்ளவர்களே, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவரையும் இன்றைய திருவழிபாட்டிற்கு அன்போடு வரவேற்கின்றோம். இன்றைய திருவழிபாடானது **திருத்தூதரான தூய பவுலின் மனமாற்றத்தை** நமக்கு எடுத்துக் கூறுகிறது. திருஅவையின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியாக இருந்த இருதூண்களில் ஒன்றாக புனித பவுல் அடிகளாரின் மனமாற்றத்தை ஏற்படுத்திய நாளை இன்று நாம் சிப்பிக்கின்றோம். ஒரு சாதாரண வாழ்க்கை வாழ்ந்து வந்த புனித பவுலை ஒரு சரித்திர வாழ்க்கை வாழ அழைத்த நாள்.

கிறிஸ்துவை சந்தித்தப்பின் தன் வாழ்வு முழுமையும் இயேசுவுக்காக அர்ப்பணித்தவராய் "வாழ்வது நானல்ல என்னில் கிறிஸ்துவே வாழ்கிறார்" என்று கூறும் அளவிற்கு மனநிலையில் மாற்றம் பெற்றவர். உண்மையான மனமாற்றம் என்பது அன்றாட வாழ்வில் மாற்றத்தை கொண்டுவரும், மாற்றம் இருக்குமிடத்தில் முன்னேற்றம் இருக்கும் என்பதற்கு சிறந்த சான்றாக விளங்கினார். எனவே, தூய பவுல் சென்ற மனமாற்றத்தின் பாதையில் நாமும் பயணம் செய்து, மாற்றத்தில் ஏற்றம் காண்பவர்களாய், இறையாட்சியின் மக்களாய் திகழ இத்திருவழிபாட்டில் பக்தியுடன் பங்கு பெறுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

தாயின் கருவில் உன்னை தேர்ந்தேன் என்ற இறைவா, எம் திருஅவையின் திருத்தந்தை, கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவறத்தார் அனைவரையும் தேர்ந்துள்ளீர் உம் இறையாட்சி அமைக்க. திருத்தூதர் பவுலைப்போல ஒவ்வொருவரும் திருஅவை புத்துயிர் பெற்று, புதுப்பொலிவடைந்து பிரகாசிக்க உழைக்க வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

இறையாட்சியை அறிவிப்போரின் மலரடிகள் எத்தனை அருமையானவை என வர்ணித்த இறைவா, திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் தாம் பெற்ற வரம், கொடைகளுக்கு ஏற்ப தாமும் வாழ்ந்து பிறரையும் வாழ வைத்து அழகு பார்க்க வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

மாற்றத்தை விரும்பின இறைவா, இருளும், வெறுமையும் நிறைந்த உலகை மாற்ற திருத்தூதர் பவுலை இருளிலிருந்து ஒளிக்கு அழைத்து உம் திருவுளத்தை நிறைவேற்றினீர். இதேப்போன்று இன்றுள்ள உலகின் சூழலும், சாட்சிய வாழ்வாக அமைய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

அன்பின் இலக்கணமே எம் இறைவா, எங்கள் வாழ்வில் நாங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயல்களும் உமது நன்மைக்காகவே செய்திடவும், அதனால் பலரும் பலனடைய போதுமான நல்ல ஞானத்தையும், அறிவையும் எங்களுக்குத் தந்து ஆசீர்வதித்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

**26.01.2024 இந்திய குடியரசு நாள்** **திருப்பலி**

**முன்னுரை** திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

எரே. 31: 31-34 திமொ.2: 1-6 யோவா.8: 31-36

இயேசு கிறிஸ்துவில் பிரியமான சகோதரிகளே, சகோதரர்களே, இன்று நாம் அனைவரும் திருஅவையாக இணைந்து நம் நாட்டின் குடியரசு நாளைக்கொண்டாடி மகிழ அழைக்கப்பட்டிருக்கிறோம். 1950ம் ஆண்டு ஜனவரி 26ம் நாள் புதிய அரசவையில் அமைப்புச்

சட்டங்களுடன் இந்தியா தன்னை ஒரு குடியரசு நாடாக அறிவித்தது. உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடு என்னும் பெருமை நம் இந்திய நாட்டுக்கே உண்டு. ஏறத்தாழ 350ஆண்டுகள் அந்நிய ஆட்சியில் கட்டுண்டு கிடந்த நாடு, ஜனநாயகத்திற்கும், குடியாட்சித்துவத்திற்கும் ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது.

இன்று இந்தியா பெற்றுள்ள வளர்ச்சி எல்லாத் தரப்பினரும் மகிழக்கூடிய அளவில் இல்லாமல் வசதி படைத்த மக்களின் வளர்ச்சியாகவே விளங்குகிறது. இந்த நிலை மாற இறைவனிடம் மன்றாடுவோம். "ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்" (நீமொ.1:7) என்பதை ஆட்சியாளர்கள் உணர்ந்து "தெய்வ பயம்" உள்ளவர்களாக வாழ மன்றாடுவோம். இன்றைய நற்செய்தியில் "உண்மை உங்களுக்கு விடுதலை" அளிக்கும் (யோவான் 8: 32) என்று இயேசு கூறுகிறார். பிறரை அன்பு செய்வதில்தான் உண்மையான விடுதலை கிடைக்கும். இந்த விடுதலையை அளிப்பவர் இறைவன் ஒருவரே. ஆதலினால் உண்மைச் சுதந்திரத்திற்காக இறைவனிடம் மன்றாடுவோம். வேற்றுமை அகற்றி, ஒற்றுமை, ஒருமைப்பாட்டை வளர்க்கும் கொடைகள் அனைத்தும் நம் நாட்டுத்தலைவர்களுக்கு இறைவன் தர இந்த குடியரசு நாள் திருப்பலியில் சிறப்பாக மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

விண்ணுலக அரசரே எம் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் உம் அன்புக்கட்டளையின்படி ஒருவரையொருவர் அன்பு செய்து வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்த இறைவா, இன்று எம் தாய்திருநாடு குடியரசு தினவிழாவைக் கொண்டாடிக்கொண்டிருக்கிறது. இன்றைய நாளில் எம்மை ஆட்சிசெய்யும் எம் தலைவர்கள் "தெய்வ பக்தி" உள்ளவர்களாகவும், பிறரன்புப்பணி செய்யும் தலைவர்களாகவும் மாற உம் அருளை வழங்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

சுகம் தரும் இறைவா, உடல் நலமின்றி வாழும் சகோதர சகோதரிகள் உம் வருகையால் நலமும் வளமும் பெற்று மனநிறைவும் மகிழ்ச்சியும் பெற்று வாழ்ந்திடத் தேவையான அருளைத்தந்திட உம்மை மன்றாடுகிறோம்.

விடுதலையின் நாயகரே எம் இறைவா, இன்றைய நாளில் நோயினாலும், கடன் தொல்லையினாலும், குடும்பங்களில் பிரச்சனைகளாலும் தவித்துக்கொண்டிருக்கும் ஒவ்வொருவரையும் உமது பாதத்தில் சமர்ப்பிக்கின்றோம். இவர்களின் தேவைகளையும் பிரச்சனைகளையும் களைந்து வாழ்வில் முழுமையான சுதந்திரத்தை அனுபவிக்கும் ஆற்றலைத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

**27.01.2024 புனித பவுல், தீத்து, திமொத்தேயு விழா** **திருப்பலி**
**முன்னுரை** திரு. சாம்சன்

இன்றைய திருப்பலியானது திருத்தூதர் பவுலின் சீடர்களாக இருந்து ஆயரான திமொத்தேயு, தீத்து, இவர்களின் விழாவினைச் சிறப்பிக்கின்றது. திருத்தூதர் பவுல் தமது புனித நூலில் திமொத்தேயு தாய் யூனிக்கி என்ற யூதப்பெண்ணுக்கும் கிரேக்க தந்தைக்கும் லிஸ்திராவில் பிறந்தவர் என்றும் திமொத்தேயு என்றால் கடவுளை போற்றுபவர் என்னும் பொருள் உண்டு என்று கூறுகிறார். கிறிஸ்தவ சமயத்தின் முதல் நூற்றாண்டில் வாழ்ந்து கி.பி. 97ல் இறந்த ஒரு புனிதரும் ஆயரும் ஆவார். பவுலின் மறையுரையைக் கேட்டு அவரின் சீடரானார். பவுல் திமொத்தேயுவைப் பார்த்து நீ இறைவாக்குரைத்து மூப்பர்கள் உன்மீது கைகளை வைத்து ஆசி வழங்கியதை மறவாதே அதன்படி நட என்று தனது நூலில் குறிப்பிடப்பட்டுள்ளார். மேலும் நீ என் அன்பார்ந்த பிள்ளை என்னும் ஆண்டவரின் இணைந்து வாழும் நீர் நம்பிக்கைக்கு உரியவர் என்றும் நம்பிக்கையின் அடிப்படையில் என் உண்மையான பிள்ளை என்றும் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். புனித தீத்துவும் பண்டைக்கால கிறிஸ்தவ சபையின் தலைவரும், ஆயரும் ஆவார். இவரும் பவுலின் பதையில் பயணம் செய்தவர். ஐயக்கிய அமெரிக்க நாடுகளின் படைத் திருப்பணியாளர்களில் சிறப்பாக சேவை செய்வோருக்கு அளிக்கப்படும் விருது "புனித தீத்து விருது" என்று அழைக்கப்படுகிறது.

இன்றைய வாசகம் விளக்கை ஏற்றி விளக்குத் தண்டின்மீது வைக்க அறிவுறுத்துகிறது. கிறிஸ்து என்னும் ஒளியைப் பெற்றுள்ள நாம் அதை பிறருக்கு பயன்படும் வகையில் ஏற்றிவைக்க வேண்டும். உலகை கவலை, மாயை, தீய ஆசைகள் அனைத்தும் நம்மை பாவத்திலிருந்து விடுவிக்கும் தலைமைப் பொறுப்பை வகிக்கும் ஒவ்வொருவரும் தங்கள் பொறுப்பு, திறமை ஆகியவற்றை பிறரும் கற்றுத் தெரிந்துக்கொள்ளும்படி மறைவாக செயல்படுத்தாமல் அனைவருக்கும் தெரியும்படி வெளிப்படுத்த வேண்டும். அப்போதுதான் மக்களும் தொடர்ந்து பின்பற்றுவர் என்று கூறப்படுகிறது. இவ்வாறு நம்பிக்கையின் வழியில் நம்மை நடத்திச்செல்லும் புனிதர்களோடு நாமும் செல்ல இத்திருப்பலி வழியாக இறையருளைப் பெற்று மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

பாதுகாத்து பராமரிக்கும் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரையும் உமது அன்புக் கரத்தினால் தொட்டு ஆசீர்வதித்து மக்கள் அனைவரும் திருஅவைக்காக எடுக்கும் முயற்சிகளை சிறப்பாக செயல்படுத்த நீர் உடனிருந்து பாதுகாத்து பராமரித்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

வழிகாட்டும் ஒளியே எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்கள் மக்கள் நலனில் அக்கறைக்கொண்டு இயற்கைச் சீற்றங்களினால் பாதிப்படைந்த மக்களுக்கு உதவிக்கரம் நீட்டி அவர்களின் வாழ்வில் மகிழ்வினை சுவைத்து உம்மையே பின்பற்றி வாழும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

வரம்தரும் வள்ளலே எம் இறைவா, குழந்தையாகப் பிறந்து எங்களின் வாழ்வில் மகிழ்வினை நீர் எங்களுக்கு அளித்ததுபோல, குழந்தைச் செல்வமின்றி வாடுவோருக்கு உமது கருணையினால் இந்நாட்களில் அவர்களுக்கு குழந்தை பாக்கியமளித்து வாழ்வினை மகிழ்விக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**30.01.2024 அருளாளர் ப்ரோனிஸ்லாஸ் மார்க்குவிஸ் திருப்பலி**

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

சனவரி 30.01.2024 இன்று அருளாளர் பொரொனிஸ்லாவ் மார்க்குவிச் என்பவரின் நினைவை திருப்பலியில் இணைந்து தியானித்து சிறப்பு செய்ய கூடியுள்ளோம். மனிதராய் பிறப்பதே மாதவம் என்பர். அப்படி பிறந்தாலும் எதற்காக ஏன் பிறந்தோம் என ஆய்விற்கு உட்படுத்தி எனது வாழ்வு அர்த்தமற்றதாக செயலற்றதாக இருக்கக் கூடாது என எண்ணி ஓர் இலக்கு நோக்கி பயணித்து பயனுள்ளதாக அமைய வேண்டும் என்ற எண்ணத்தில் பயணிப்பவர்கள் ஒரு சிலரே. அப்படி தன்னை அர்ப்பணித்து செயலாக்கம் செய்து வாழ்ந்து அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டவர் இன்றைய புனிதர்.1842 ல் ஜுலை 13 ம் நாள் போலந்து நாட்டில் பிறந்தார். இளம் வயதிலேயே இறைப் பணிக்காக 1857 செப்டம்பர் 15ம் நாள் அருட்பணியாளராக திருநிலைப்படுத்தப்பட்டார். பிரிஸ்மைசில் என்ற ஊரின் மறை மாவட்டத்தில் பதினெட்டு ஆண்டுகள் மிகுந்த ஆர்வத்தோடும் ஊக்கத்தோடும் தனது குருத்துவ பணியை செவ்வனே செய்தார்.

பின் சலேசிய சபையில் சேர்ந்தார்.சபையின் தலைவராக இருந்த புனித ஜான் போஸ்கோவுடன் இணைந்து பணி புரிந்தார். 1897 ல் குருவானவர்களுக்கும் கன்னியர்களுக்கும் மிக்கேல் எனும் சபையை நிறுவினார்.இறையன்பாலும் பிறரன்பாலும் உந்தப்பட்டு இவர் பணி புரியும்போது மிகுந்த தன்னடக்கத்துடன் இருப்பதில் கவனம் செலுத்தினார்.இவர் தனது வாழ்க்கையை கைவிடப்பட்டவர்கள் அனாதைகள் ஒதுக்கப்பட்டவர்கள் வாழ்க்கையில் நெறி தவறிய இளைஞர்கள் போன்றோர்களுக்காக தன்னை அர்ப்பணித்து அவர்கள் வாழ்வு மேம்பட சிறந்து விளங்க உழைத்தார்.

இறுதியில் 1912 சனவரி 29 ம் நாளில் இறைவனோடு இணைந்தார்.இவரின் சிறப்புக்களை பார்த்த திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் அவர்கள் ஜுன் 19 2005ல் அருளாளர் பட்டம் வழங்கி இவரை கௌரவித்தார். ஏதோ பிறந்தோம் வாழ்ந்தோம் என்றில்லாமல் இப்புத்தாண்டில் இப்புனிதரை

தியானிக்கின்ற இத்திருநாளில் இறைஇயேசுவின் இலக்கு நோக்கி பயணித்து இறையாட்சி மலர சபதம் ஏற்று இணைந்து செபிப்போம்

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டுகள்**

தாயும் தந்தையுமான இறைவா இப் புத்தாண்டு முழுதும் புதுமை மணம் மணக்க வேண்டும் எம் திரு அவை அருட் பணியாளர்கள் அணைவரும் இன்று கொண்டாடும் இப் புனிதரை போன்று செயலாக்கத்தில் மிகுந்த கவனம் செலுத்தி இறைப் பணி வாழ்வின் மேன்மையை அறிந்து உணர்ந்து செயல்பட ஆவியின் வல்லமையால் நிரப்பிட உம்மை மன்றாடுகிறோம்

அன்பை பொழியவே உருவெடுத்த இறைவா உலக மக்கள் அனைவரும் ஏற்றத்தாழ்வு இன்றி இறையன்பிலும் பிறரன்பிலும் சிறந்து அதற்காகவே தன்னை அர்ப்பணித்து வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

மனம் மாறுங்கள் என உரைத்த இறைவா சமய சாதி இன மொழி நாடு எனப் பாராமல் எல்லோரும் ஒன்றாக இருப்பார்களாக என்ற உமது வாக்கு நிறைவேற பண்பாடு கலாச்சாரம் என்ற பெயரில் மனிதத்திற்கு எதிராக திணிக்கப்படும் அனைத்தும் களையப்பட்டு ஒரு மனத்தோராக இணைந்து வாழும் வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்

**28.01.2024 பொதுக்காலம் 4ஆம் ஞாயிறு திருப்பலி முன்னுரை**

I. இச. 18: 15-20 II. 1கொரி 7: 32-35 மாற்கு 1: 21-28

கிறிஸ்து இயேசுவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே, உங்கள் அனைவரையும் மூவொரு இறைவனின் திருப்பெயரால் ஞாயிறு வழிபாட்டை சிறப்பிக்க அன்புடன் அழைக்கிறோம். இன்றைய வாசகங்கள் அனைத்தும் ஆழ்ந்து சிந்திக்க கூடியதாக அமைந்துள்ளன. இன்றைய முதல் வாசகத்தில் இறைவன், என்னுடைய வார்த்தைகளை எனது சார்பாக நான் தெரிந்துக்கொண்ட இறைவாக்கினன் வாயில் வைப்பேன், என் கட்டளைகளை உங்களுக்கு அவர் சொல்வார் எனவும், போலி இறைவாக்கினரைக் குறித்தும் நமக்கு தெளிவுப்படுத்துகிறார். இரண்டாம் வாசகத்தில் தூய பவுல், மணமானவர் குறித்தும், மணமாகாதோர் குறித்தும் தங்களின் மனநிலையை குறித்து நமக்கு விளக்குகிறார். மேலும் ஆண்டவர் கிறிஸ்து மாற்கு நற்செய்தியில் கப்பர்நாகூம் ஊரில் தனது போதனையும் தீய ஆவியை விரட்டியதையும் அதன்மூலம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்குள் உள்ள அதிகாரத்தை மக்கள் அறிந்திட செய்ததை மாற்கு நற்செய்தியாளர் தெளிவாக விளக்குகிறார்.

மேலும் நம் தாய்த்திருச்சபையானது தூய தாமஸ் அக்குவினாஸின் வாழ்வையும் சிறப்பிக்கின்றது. பெரிய படைத்தளபதியாக வருவான் என்று எண்ணிய பெற்றோருக்கு தான் இறை ஊழியம் செய்யப் போவதாக கூறி தூய ஜூலியனின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு தனது 18ம் வயதில் சுவாமிநாதர் சபையில் இணைந்து இறைப்பணியாற்றினார். நாம் ஆராதனையில் பாடுகின்ற "மாண்புயர் கீதம்" பாடலை இயற்றியவர் இவரே. இவரின் கல்வியறிவும், விசுவாசமும் திருச்சபையின் மறைவல்லுநர் இவர் என்று தூய தாமஸ் அக்குவினாசை அழைக்கும் அளவிற்கு இருந்தது. இறை ஊழியத்தை அனைவரும் செய்ய வேண்டுமென்றும், அருட்தந்தையர்கள், துறவறத்தார் மட்டும்தான் செய்ய வேண்டுமென்று இல்லாமல் திருமணமானவர்களும் தங்களின் தூய சான்று வாழ்க்கையில் இறை ஊழியம் செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார். இத்திருப்பலியில் தூய்மையான அர்ப்பணத்துடன் கூடிய இறை ஊழியத்தை செய்ய அருள் வேண்டி இத்திருப்பலியில் பங்கேற்போம், இறையருள் பெறுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

அனைத்தின் மேலும் அதிகாரம் கொண்ட எம் தந்தையே, தாய் திருச்சபையை அன்போடு வழிநடத்தி பேணிகாக்க நீர் ஏற்படுத்திய எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் அதிகாரத்தை விடுத்து அன்போடு உம் அவையை கட்டியெழுப்ப வேண்டிய அருள்வரங்களை தருமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

தன்னலமற்ற இறைவனே, நீர் எவ்வாறு தன்னலமில்லாமல் எங்கள் ஒவ்வொருவருக்காகவும் உம்மையே அர்ப்பணித்தீரோ அவ்வாறு இந்நாட்டையாளும் தலைவர்களும் தன்னலம் விடுத்து நாட்டு மக்களுக்காக பொதுநலத்தோடு தொண்டாற்ற வேண்டிய நல்ல மனதைத்தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

தேற்றரவாளரே எம் இறைவா, உணவில்லாமலும், வறுமையினாலும், கடன் தொல்லையினாலும், நோயினாலும் வருந்தும் மக்களை உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். உமது ஆதரவும் அன்பும் அவர்களுக்கு அதிகமாக அளித்து, எடுக்கின்ற நல்ல முயற்சிகளையும், செய்கின்ற செயல்களையும் நிறைவாக செய்தருள அவர்களுக்குத் தேவையான அனைத்து வரங்களையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

நான் உனக்கு காட்டும் வழியில் நட என்ற எம் இறைவா, இருபால் இளையோரையும் உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் உமது போதனைகளைக் கேட்டு, அதன்படி வாழ்ந்து திருச்சபைக்கும், சமுதாயத்திற்கும் ஏற்ற பிள்ளைகளாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 31.01.2024 தூய தொன் போஸ்கோ பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

அன்புக்குரியவர்களே, இன்று திருஅவையானது இளையோரின் வாழ்விற்காக தன்னையே தேர்ந்துக்கொண்ட இளையோரின் தந்தையும் ஆசிரியருமான தூய ஜான் போஸ்கோவின் விழாவை கொண்டாடுகின்றது. சலேசியர்களின் தந்தை, விடியலுக்காக ஏங்கித் தவித்திடும் இளம் உள்ளங்களுக்கு விடிவெள்ளியாய் திகழ்ந்தவர். சாகா வரம்பெற்ற வரலாற்று ஏடுதனில் தனக்கென முத்திரையைப் பதித்துக்கொண்டவர். ஆன்மாக்களே வேண்டும், வேறொன்றும் வேண்டாம் என ஆர்த்தெழுந்த ஆன்மீகவாதி. சிறந்த கல்வியாளர், கருத்தினையும், சிந்தையினையும், கைத்தேர்ந்த அணுகுமுறையினையும் சீர்ப்படுத்தியவர். சமூக சீர்கேடு, ஏற்றத்தாழ்வு நீக்கிய புத்துலக சிற்பி. மனிதம் மலர உறவு வளர மண்ணில் அன்பு பூத்து மனம் பரப்பும் புரட்சிக்கு வித்திட்டவர் நம் தந்தை தொன் போஸ்கோ. உலகெங்கும் உள்ள சலேசியர்களுக்கும் அவர்களால் பயன்பெறும் அனைத்துசார் மக்கள் மட்டுமன்றி, மொழி, இனம், சாதி எனும் எத்தகைய பாகுபாடுகள் உள்ள சமுதாயத்திற்கும் தூய தொன் போஸ்கோவின் வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம். அவரின் வாழ்க்கை நமக்கு கொடுத்துள்ள அற்புதமான சூத்திரங்களான நற்கருணை, மரியன்னை மற்றும் திருச்சபை பக்தி வழியில் நல்ல கத்தோலிக்க கிறிஸ்துவர்களாகவும், நேர்மையுள்ள மக்களாகவும் வாழ முயற்சிப்போம். அதற்காக நம்மையே தயார்ப்படுத்தி, ஆழப்படுத்திக் கொள்ள இவ்விழா நமக்கு உதவியாக இருக்க வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

நன்மையே உருவான இறைவா, திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் குறிப்பாக சலேசிய துறவிகள் அனைவரும் தங்களுடைய அழைப்பிற்கேற்ப சான்று பகர்ந்து, நற்செய்தியை மகிழ்ச்சியுடனும், தாராள உள்ளத்துடனும் எடுத்துரைக்கத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

அன்பு நிறைந்த இறைவா, உலக மக்கள் அனைவரும் சமுதாயத்தின் மேன்மைக்காக குறிப்பாக இளைய சமுதாயத்தினருக்காக, தன்னலமற்ற தாராள உள்ளத்தோடு பணியாற்றிட வேண்டுமென உம்மை மன்றாடுகின்றோம்.

அனைத்தையும் ஆதரித்தாளும் இறைவா, சலேசியர்கள் மற்றும் சகாய அன்னையின் புதல்வியர்கள் மற்றும் சலேசிய குடும்பத்தினர் யாவரும் தங்கள் அழைப்பிற்கேற்ப இளையோருக்காக சேவை செய்யவும், அவர்களை தூய ஜான் போஸ்கோ வழியில் உருவாக்கவும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

அன்பு இறைவா, கைவிடப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட, குறிக்கோளற்ற இளையோர் தூய ஜான் போஸ்கோவின் ஒவ்வொரு வழித்தோன்றல்களிலும் ஒரு நண்பரைக் கண்டடைய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

நலமெல்லாம் நல்கிடும் இறைவா, இளையோரின் பணியில் ஈடுபட்டுள்ளோர் தங்களுடைய பாதுகாவலர் தூய தொன் போஸ்கோவின் வழியில் தம் திருத்தூதுவ வாழ்வில் ஆர்வமுடன் செயலாற்றும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

### பகுதி 2: நம்பிக்கையில் வளர...

## இறைவனின் தாய் நம் அனைவரின் தாய்

- டே. ஆக்னல் ஜோஸ்

ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி முதல் நாளில், "புனித கன்னி மரியா, இறைவனின் தாய்" என்ற மெய்கோளுக்கு கத்தோலிக்கத் திருச்சபை பெருவிழா எடுத்து மகிழ்கிறது. உருவமற்ற கடவுளுக்கு மனித உடலை வழங்க, தாயின் வயிற்றிலேயே கடவுளால் தேர்ந்தெடுக்கப் பெற்றவர் மரியா. கிறிஸ்து பிறப்பின் எட்டாம் நாளில், மனிதரான இறைவன் இயேசுவின் தாயாக மரியா திகழ்கிறார் என்ற உண்மையைப் பறைசாற்றும் விதத்தில் இக்கொண்டாட்டம் நடைபெறுகிறது. மனிதகுலத்தில் பிறந்த மரியா இறைவனுக்குத் தாயானது மட்டுமின்றி, நம் அனைவரின் தாயாகவும் திகழ்கிறார் என இவ்விழா நமக்கு நினைவூட்டுகிறது.

தொடக்கத்தில் எல்லாம் வல்ல தந்தையோடு கடவுளாக இருந்த வாக்கானவர், கன்னி மரியாவின் கருப்பையில் உடலேற்று மனிதராகி நம்மிடையே குடிகொண்டார் (யோவா 1:14) என்பதை நாம் அறிந்திருக்கிறோம். நமது மீட்புக்காக விண்ணகத்தில் இருந்து மண்ணகம் வந்த மகனாகிய இறைவனைத் தமது கருப்பையில் சுமந்து பெற்றதால் கன்னி மரியாவை இறைவனின் தாய் என்று திருச்சபை போற்றுகிறது. "இயேசு விண்ணகத்தில் தாய் இன்றியும், மண்ணகத்தில் தந்தை இன்றியும் பிறந்தார்" என புனித அகுஸ்தீன் குறிப்பிடுகிறார். இவ்வாறு, இயேசுவின் தனித்துவமானத் தாயாகத் திகழும் பேறு மரியாவுக்கு கிடைத்தது.

திருச்சபை தோன்றியக் காலம் முதலே, விவிலியமும் திருமரபும் கன்னி மரியாவை இறைவனின் தாய் என்று இயம்பி வருகின்றன. மரியாவை "இம்மானுவேலின் (நம்மோடுள்ள இறைவனின்) தாய்" என மத்தேயுவும், "ஆண்டவரின் தாய்" என லூக்காவும் நற்செய்திகளில் சான்று பகர்கின்றனர். திருத்தூதர் யோவானின் சீடரான அந்தியோக்கு புனித இக்னேசியுஸ், "தூய கன்னி மரியே, நீர் உறுதியாக நமது ஆண்டவரைக் கருத்தாங்கினீர்" என்று கூறுகிறார். உலகை உருவாக்கிய வாக்கான இறைவனை, தமது கருப்பையில் சுமந்து பெற்றதால் கன்னி மரியா இறைவனின் தாயே என திருச்சபைத் தந்தையர் உறுதியாகக் கூறினர்.

இவ்வாறு தொடக்கத்தில் இருந்தே, கன்னி மரியாவை இறைவனின் தாயாகப் போற்றும் வழக்கம் கிறிஸ்தவர்கள் நடுவே நிலவி வந்துள்ளது. ஆயினும் சிலர், "இயேசு இறைவன் அல்லர் ஒரு சாதாரண மனிதர் மட்டுமே" என்று கூறினர். வேறு சிலரோ, "இயேசு மனிதர் அல்லர். இறைவனான அவர் உடலற்ற வெறும் தோற்றத்திலேயே இவ்வுலகில் வெளிப்பட்டார்" என்று வாதாடினர். இவ்வாறு வாதிட்டவர்கள், கன்னி மரியாவை இறைவனின் தாயாகவும் ஏற்க மறுத்தனர். இத்தகையக் குழப்பங்கள், இயேசுவின் இறையியல்பு மற்றும் மனிதவியல்பு குறித்த ஒரு தெளிவை ஏற்படுத்துமாறு திருச்சபைத் தந்தையரைத் தூண்டின.

இறைமகன் இயேசுவிடம் இறையியல்பும் மனிதவியல்பும் ஒன்றுக்கொன்று இணைந்தும், முரண்படாமலும், இரண்டறக் கலந்து இருக்கின்றன என்ற உண்மையைத் திருச்சபை உறுதி செய்ய விரும்பியது. இதற்காக கி.பி. 431ல் புனித சிரில் தலைமையில் எபேசு நகரில் கூடிய பொதுச்சங்கம், இயேசுவில் உள்ள இரண்டு இயல்புகளுக்கும் விளக்கம் அளித்தது. இயேசு மனிதராக பிறந்த பொழுதும் அவரிடம் இறையியல்பு முழுமையாக இருந்தது, இதனால் புனித மரியா இறைவனின் தாயாகும் பேறுபெற்றார் என்று இச்சங்கம்

தெளிவுபடுத்தியது. இவ்வாறு, கன்னி மரியா, இறைவனின் தாய் என்ற மெய்கோள் உறுதி செய்யப்பட்டது.

451ல் கூடிய கால்செதோன் பொதுச்சங்கமும் அன்னை மரியாவை இறைவனின் தாய் என்று உறுதிபட அழைத்தது. 553ல் கூட்டப்பட்ட 2ம் கொன்ஸ்தாந்திநோபிள் பொதுச்சங்கம், "எப்பொழுதும் கன்னியான இறைவனின் தாய்" என மரியாவைப் பெருமையுடன் மொழிந்தது. புனித மரியா தூய ஆவியால் கருவுற்றார் என்பதால், இயேசுவைக் கருத்தாங்கும் முன்பு இருந்தது போலவே, அவரைக் கருவில் சுமந்த வேளையிலும், அவரைப் பெற்றெடுத்த பின்பும் கன்னியாகவே இருந்தார் என்றும் இச்சங்கம் விளக்கம் அளித்தது. இவ்வாறு புனித கன்னியும் தாயுமான மரியா உண்மையில் "இறைவனின் தாய்" என்பது தெளிவாகிறது.

"முதல் பெற்றோர் பாவம் புரிந்தபின், அலகையின் மேல் பெறப்போகும் வெற்றி குறித்து அவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியில் மரியா இறைவாக்காக முன்னுருவகிக்கப் பெற்றதை பிற்கால முழு வெளிப்பாட்டின் ஒளியில் நாம் காணலாம்" (திச எண். 55). இவ்வாறு மீட்பரின் தாயாகக் குறிக்கப்பட்ட மரியா, தமது கீழ்ப்படிதலால் கடவுளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்குத் தாயாகவும் புதிய ஏவாளாகவும் திகழ்ந்து வருகிறார். "கடவுளின் தீர்மானத்தால் முன்குறிக்கப் பெற்று, கிறிஸ்து வழியாய் அவரது உரிமைப்பேற்றுக்கு உரியவராக மரியா திகழ்வதால்" (எபே 1:11), அவர் இறைவனின் தாய் என்பதில் ஐயமில்லை.

"தாவீது குடும்பத்தினராகிய யோசேப்புக்கு மண ஒப்பந்தமான கன்னி மரியாவை (லூக் 1:27) தம் மகனுக்குத் தாயாக கடவுள் தேர்ந்தெடுத்தார்" என்று கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வி (எண். 488) கூறுகிறது. "தூய ஆவியால் கன்னி மரியாவின் கருப்பையில் மனிதராக கருவான அதிபுனித திரித்துவத்தின் இரண்டாம் ஆளும், இறைத்தந்தையின் நித்திய மகனுமான இயேசு, உடல் சார்ந்த முறையில் உண்மையிலேயே மரியாவின் மகன் ஆனார். எனவே, திருச்சபை மரியாவை மெய்யாகவே "இறைவனின் தாய்" என்று அறிக்கையிடுகிறது" (கதிம எண். 495) என்ற விசுவாசத்தையும் அது தெளிவாகப் போதிக்கிறது.

இயேசுவின் விண்ணேற்றத்துக்குப் பிறகு அனைத்து சீடர்களுமே அன்னை மரியாவின் அரவணைப்பில் வாழ்ந்தார்கள் என்று லூக்கா குறிப்பிடுகிறார். "அவர்கள் அனைவரும் சில பெண்களோடும், இயேசுவின் சகோதரர்களோடும், அவருடைய தாய் மரியாவோடும் இணைந்து ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள்" (திப 1:14). இந்த தொடக்கச் சீடர்களைப் பின்பற்றியே, கிறிஸ்தவர்கள் அனைவரும் மரியாவை நமது தாயாக ஏற்கின்ற வழக்கம் வந்தது. மேலும், "இறைவனின் புனித அன்னையே, நாங்கள் உமது பாதுகாவலைத் தேடி வருகிறோம்" என்ற செபம் மூன்றாம் நூற்றாண்டிலேயே தோன்றியது.

மனிதரான இறைமகன் இயேசுவை நமக்கு கொடையாக அளித்தவர் என்பதால், நம் அனைவரின் தாயாக கன்னி மரியா திகழ்கிறார். ஆகவேதான், "புனித மரியே, இறைவனின் தாயே, பாவிகளான எங்களுக்காக இறைவனை மன்றாடும்" என்று எபேசு பொதுச்சங்கத் தந்தையர் எழுப்பிய வேண்டுதலை நாம் இன்றளவும் தொடர்கிறோம். அவரும் விண்ணகத்தில் தமது மகனிடம் நமக்காகப் பரிந்துபேசி, நமது அருள் மற்றும் பொருள் தேவைகளில் உதவி செய்து வருகிறார். இறைவனின் தாயும் நம் அனைவரின் தாயுமான புனித கன்னி மரியாவின் அரவணைப்பில் நம்மை ஒப்படைத்து, விண்ணகத்தை உரித்தாக்கி மகிழ்வோம்.

## இறைவன் தந்த இனியவர் - தொன் போஸ்கோ

திரு. ஜான் அலெக்சாண்டர்

தூய தொன் போஸ்கோ செய்த ஒவ்வொரு செயலையும் "அருள்நிறைந்த மரியே" என்ற செபத்தைச் சொல்லிவிட்டுதான் செய்வார். அவர் மரியாளின் மீது கொண்ட பக்தி அளவிடமுடியாதது. அன்னை மரியாளின் பரிந்துரை வழியாக அவர் வாழ்வில் நிகழ்ந்த புதுமைகள் எண்ணிலடங்கா. தன் ஒன்பது வயது கனவு முதல் பல உதாரணங்களை சொல்லிக் கொண்டே போகலாம். குறிப்பாக அந்த ஒன்பது வயது கனவில் மரியன்னையின் துணை வழியாக எதிர்காலத்தில் அவர் ஆற்றவிருக்கும் இளையோர் பணியைக் குறித்து காட்டுவதை நாம் உணரலாம்.

தூய தொன் போஸ்கோ மரியன்னையின் பக்தியில் வளர்வதற்கு முழு காரணமாக விளங்கியவர் அவரது தாய் மம்மா மார்கரெட். சிறுவனாக இருந்த ஜானை கஸ்தல்நுவோவில் விடுவதற்கு முன் "ஒரு போதும் தேவத்தாயின் பக்தியை மறக்காதே" என்று மம்மா மார்கரெட் கூறினார். இதை தொன் போஸ்கோ தன் ஆழ்மனதில் பதித்தவராய் மட்டுமல்ல பின்னாலில் வளர்ந்து குருமடத்தில் சேர வேண்டிய நாளிலும் தன் தாய் அவரிடம் சொன்னது "நீ இவ்வுலகில் பிறந்ததும் உன்னை நான் தேவ அன்னைக்கு ஒப்புக்கொடுத்தேன். பின்னர் உன்னையும் அன்னையின் மீது பக்தியாய் இருக்கும்படிச் சொன்னேன். இப்போது நீ உன்னை முழுவதும் அந்த தாய்க்கு ஒப்புக்கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். நீ குருப்பட்டம் பெற்றால் உன் உயிருள்ளவரை அத்தாயின் பெருமையை எங்கும் பரப்பிட மறவாதே" என்பதே.

சலேசிய சபையைக் கட்டி எழுப்ப உறுதுணையாகவும், சபையின் வளர்ச்சியில் அச்சாணியாகவும் இருந்ததும் அன்னை மரியாள் மற்றும் அருள்நிறைந்த மரியே என்ற சிறு செபம் மட்டுமே என்று தொன் போஸ்கோ பலமுறை சொல்லியிருக்கிறார். மரியன்னையின் மீதுள்ள பாசத்தினாலும் அன்பினாலும் தொன் போஸ்கோ, கிறிஸ்தவர்களின் சகாய அன்னையாகவும் சலேசிய சபையை சகாயத்தாய்தான் வழிநடத்துகிறார் என்று அடிக்கடி நினைவுறுத்துவார். சபையின் தொடக்கத்தில் பல தோல்விகள் இருந்தாலும் சகாய அன்னையின் ஆசீர் என்றும் இருந்ததை அவர் உணர்ந்தார். தொன் போஸ்கோவின் வாழ்வில் அந்த சகாய அன்னையின் வழிகாட்டுதலில் பல இளைஞர்களை மரியன்னையின் பாதத்தில் சேர்த்தது. இளையோர் மன்றங்களில் மாணவர்கள் மரியன்னை பாடல்கள் பாடும்போதெல்லாம் தானும் அவர்களோடு மகிழ்ந்து பாடுவார். மரியன்னையின் பக்தியில் தன்னை ஒருமித்து அதன்வழி பல மாணவர்களைக் கவர்ந்தவர் நம் தொன் போஸ்கோ.

மரியன்னை தொன் போஸ்கோவின் வாழ்வில் செய்த மிகப்பெரிய புதுமை என்று சொன்னால் அது மரியன்னைக்காக கிறிஸ்துவர்களின் சகாய அன்னையின் பெயரில் கட்டியெழுப்பிய மாபெரும் பேராலயத்தை நாம் சொல்லலாம். பல எதிர்ப்புகள் வந்தது, அரசாங்க அனுமதி மறுக்கப்பட்டது என்றாலும் அப்போதைய திருத்தந்தை 9ம் பத்திநாதரின் அங்கீகாரம் மற்றும் அவரின் முதல் நன்கொடையான ரூ.500 மட்டுமே மூலதனமாக கொண்டு கையில் வேறு பணமில்லாமல் அப்பேராலயம் கட்டும் பணியை ஆரம்பித்த தொன் போஸ்கோவிற்கு பணம் தேவைப்பட்ட போதெல்லாம் சகாய அன்னை மூலமாக வியப்பிற்குரிய வகையில் கிடைக்க ஆரம்பித்தது. அவர் முழுநம்பிக்கையோடு "சகாய அன்னை தாமே தமக்கு ஒரு ஆலயத்தைக் கட்டிக்கொண்டாள்" என்று கூறுவார்.

அது மட்டுமல்ல, மோட்ச இராக்கினி மாதா திருவிழாவிற்கு ஆயத்தமாக மூன்று நாள் மறையுரை ஆற்ற தொன் போஸ்கோ அழைக்கப்பட்டிருந்தார். அவ்வூரில் மூன்று மாதகாலமாக மழையின்றி பயிர்கள் அனைத்தும் வாடிப்போயின. எத்தனையோ பக்தி முயற்சிகள், செப வழிபாடுகள் நடத்தப்பட்டும் பயனில்லை. முதல் மறையுரையில் தொன் போஸ்கோ மக்களிடம், "இந்த மூன்று நாள் நீங்கள் மறையுரையைக் கேட்டு கடைசி நாளில் நல்லதொரு ஒப்புரவு அருட்சாதனம் பெற்று நற்கருணையை உட்கொண்டால் சகாய அன்னையின் அருளால் நிச்சயம் மழை பெய்யும் என்று உங்களுக்கு உறுதியளிக்கிறேன்" என்று கூறினார். இவ்வாறு கூறிய தொன் போஸ்கோவிற்கே தெரியவில்லை அவர் எப்படி அவ்வாறு சொன்னார் என்று. அவருடைய மறையுரையை கேட்ட மக்களும் நம்பிக்கையோடு இறை இயேசுவைப் பக்தியுடன் உட்கொண்டனர். திருவிழா நாள் அது. எப்போதும்போல் சூரியன் சுட்டெறித்தான். மழை மேகங்களின் வருகைக்கான அறிகுறியும் இல்லை. மாலை நேரமும் வந்தது. தொன் போஸ்கோ சகாய அன்னையின் மீதுள்ள நம்பிக்கையில் அன்றைய கடைசி நாள் மறையுரையை தொடங்கினார். எல்லோரும் ஆவலோடு மழையை எதிர்நோக்கி காத்திருக்க, நேரம் ஆக ஆக தொன் போஸ்கோவின் முகத்தையே பார்த்திருந்தனர்.

சிறுதுநேரத்திற்குள் வானம் இருண்டு இடியும் மின்னலும் உண்டாகி, கனமழை பெய்தது. மரியன்னை அற்புதமாய் எவ்வாறு அற்புதங்களை தன் வாழ்வில் செய்துவருகிறாள் என்று சொல்லி கண்ணீரோடு அந்த சகாயத்தாயைப் போற்றினார்.

தொன் போஸ்கோ சலேசிய குடும்பத்திற்கு மட்டுமல்ல நம் அனைவருக்கும் மரியன்னையைத் தாயாகவும், பாதுகாவலியாகவும், புதுமைகள் நிகழ்த்துபவளாகவும், துன்ப வேளைகளில் ஆறுதல் அளிப்பவளாகவும் நமக்காக இறைவனிடம் பரிந்து பேசுபவளாகவும் கொடுத்துள்ளார் என்பதில் மாற்றுகருத்து கிடையாது. மரியன்னை தொன் போஸ்கோவின் வாழ்வில் எவ்வாறு புதுமைகள் செய்தாரோ அதே போன்று நமது வாழ்விலும் செய்ய காத்திருக்கிறாள் என்பதை மறந்துவிடக்கூடாது.

"மரியன்னையின் மீது நம்பிக்கை வைப்போம், அற்புதங்களை காண்போம்"

## திருஅவையின் செய்திகள்

சகோ. சூசைராஜ். சு.ச.

அன்புகூர முதலில் கடவுள், இரண்டாவது அயலார், மூன்றாவது படைப்பு

போர்களின் காரணமாக எண்ணற்ற சிறார் வேதனைகளை அனுபவித்துவரும் இன்றைய காலக்கட்டத்தில் அனைவரும் ஒருவரையொருவர் உடன்பிறப்புக்களாக நடத்தி அன்புகூர்வது என்பது ஒரு மாபெரும் கொடையாக இருக்கும் என சிறார் அமைப்பு ஒன்றிடம் தெரிவித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

தற்போது காசாவில் இடம்பெற்றுவரும் போரால் இதுவரை மூவாயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் இறந்துள்ளதையும், உக்ரைனில் இடம்பெற்றுவரும் போரால் 500க்கும் மேற்பட்ட குழந்தைகளும், ஏமனில் சில ஆண்டுகளாக தொடரும் போரில் ஆயிரக்கணக்கான குழந்தைகளும் உயிரிழந்துள்ளதைச் சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வன்முறைகளின் சக்கரச் சுற்றை நிறுத்தும் நோக்கத்தில், அதற்கு பொறுப்பான மனங்களைத் தொடுவதற்கு நாம் சிறு விளக்குகளாகச் செயல்படவேண்டும் என இப்போரில் உயிரிழந்த குழந்தைகள் நம்மை நோக்கிக் கேட்கிறார்கள் என மேலும் கூறினார்.

அன்புகூர்ந்து செயல்பட வேண்டியதன் அவசியம் குறித்து அக்குழுவிடம் எடுத்துரைத்த திருத்தந்தை, முதலில் கடவுளையும், இரண்டாவது அயலாரையும், மூன்றாவதாக படைப்பையும் அன்புகூர நம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்ற விண்ணப்பத்தை முன்வைத்து, 'இது நம் இல்லம்' என அக்குழுவால் எடுக்கப்பட்டுள்ள இவ்வாண்டிற்கான தலைப்பு குறித்தும் பாராட்டுக்களை வெளியிட்டார்.

உடன்பிறந்த உணர்வுநிலைகளைப் பகிர்ந்து அன்பின் பாதையில் அர்ப்பணத்துடனும் நம்பிக்கையுடனும் நடைபோடுங்கள் என்ற விண்ணப்பத்தையும் அக்குழுவின் சிறாருக்கு வழங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அருளாளராக உயர்த்தப்பட்ட கர்தினால் EDUARDO FRANCISCO PIRONIO

அனைவருக்கும் சகோதரனாகவும், தந்தையாகவும், ஆசிரியராகவும் இருந்த ஒருவரை அருளாளராக, பரிசாக நமக்களித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு நன்றி என்றும், அருளாளர் Eduardo Francisco Pironio அவர்களின் முன்மாதிரிகையான வாழ்க்கையும் வார்த்தையும் எப்போதும் நம் இதயங்களில் உள்ளது என்றும் கூறினார் கர்தினால் FERNANDO VÉRGEZ ALZAGA.

டிசம்பர் 16 சனிக்கிழமை அர்ஜெண்டினாவின் தூய லூஜான் அன்னை மரியா திருத்தலத்தில் கர்தினால் Eduardo Francisco Pironio அவர்கள் அருளாளராக உயர்த்தப்பட்ட திருப்பலியின் போது வழங்கிய மறையுரையில் இவ்வாறு கூறினார் வத்திக்கான் நகர நிர்வாகத் தலைவர், கர்தினால் Fernando Vérgez Alzaga.

தாழ்ச்சியான பணியாளர், நற்செய்தியில் ஆழமான நம்பிக்கை கொண்டவர், பொறுமையின் சாட்சி, தனது ஏழை சகோதரர்களின் துணிச்சலான பாதுகாவலர்" என்றும், அர்ஜெந்தினாவின் லூஜான் அன்னை மரியாவிற்கு அருளாளர் எதுவார்தோவிற்கும் இடையில் பிரிக்க முடியாத ஒரு இணைப்பு உள்ளது என்றும் கூறினார் கர்தினால் FERNANDO VÉRGEZ ALZAGA

கர்தினால் Eduardo Francisco Pironio இறந்த பிறகும் அர்ஜென்டினா முழுவதிலுமிருந்து நம்பிக்கையாக நிலைத்திருக்கும் ஒரு பிணைப்பு, விண்ணகத்தில் அவர் அனுபவிக்கும் கன்னி மரியாவின் மீதான அவரது அன்பை எடுத்துரைக்கின்றது என்றும் கூறினார் கர்தினால் ALZAGA.

விண்ணக மகிழ்ச்சி

ஒரு ஆணோ பெண்ணோ திருஅவையால் அருளாளர்களாக அறிவிக்கப்பட்டால் அவர்கள் விண்ணக மகிமையில் கடவுளைப் பற்றிய சிந்தனையில் மகிழ்ச்சியின் முழுமையை அடைந்துவிட்டார்கள் என்று அர்த்தம் என்று எடுத்துரைத்த கர்தினால் ALZAGA அவர்கள், விண்ணகம் என்பது கடவுளின் மகிழ்ச்சியில் நுழைவது என்றும் அருளாளராக உயர்த்தப்பட்ட அந்த நபர் கடவுளுடன் நெருங்கிய உறவில் இருக்கின்றார் என்பது திருஅவை இதன்வழியாக உறுதிப்படுத்துகின்றது என்றும் எடுத்துரைத்தார்.

புனிதத்தன்மை, அவரது வீர நற்பண்புகள், முன்மாதிரியான வாழ்க்கை, எழுத்துக்கள் அவரால் நிகழ்ந்த அற்புதங்கள் மற்றும் புதுமைகள் அனைத்தும் தீவிரமான ஆராய்ச்சியுடன், நிபுணர்கள் குழுவால் ஆய்வு செய்யப்பட்டது என்று எடுத்துரைத்த கர்தினால் அல்சாகா அவர்கள், ஆண்டவராகிய தந்தைக் கடவுள் என்னை மிகவும் அன்பு செய்கின்றார், அன்னை மரியா என்னுடன் இருக்கின்றார், விதையாக மடிய சிலுவையின் பலனை வாழ்வது அவசியம் என்னும் மூன்று கருத்துக்களை எப்போதும் தனது வாழ்வில் கடைபிடித்தவர் அருளாளர் நுனரயசனழ என்றும் கூறினார்.

புலம்பெயர்ந்தோர்க்கான பன்னாட்டு நாள்

நமது நாகரீகம் ஆபத்தில் இருக்கும் காலத்தினை அடையாளப்படுத்துவதே புலம்பெயர்தல் என்றும், கிறிஸ்துமீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையும் ஆபத்தில் உள்ளது என்றும் தன் டுவிட்டர் குறுஞ்செய்தியில் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

டிசம்பர் 18 திங்கள் கிழமை சிறப்பிக்கப்படும் புலம்பெயர்ந்தோர்க்கான பன்னாட்டு நாளின் போது ஹேஸ்டாக் புலம்பெயர்ந்தோர் என்ற தலைப்பில் இவ்வாறு தனது கருத்துக்களை டுவிட்டர் குறுஞ்செய்தியாகப் பதிவிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மத்தேயு நற்செய்தி ( 25;35) இறைவார்த்தையின் வழியாக நான் அந்நியனாக இருந்தேன், என்னை ஏற்றுக் கொண்டீர்கள் என்று கூறும் இயேசுவின்மீது நாம் கொண்ட நம்பிக்கையும் ஆபத்தில் உள்ளது என்றுக் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை அவர்கள், கடவுள் நம்மீது கொண்டிருக்கும் அன்பைப் போல, நெருக்கம், மென்மை, இரக்கம் ஆகியவற்றால் ஆன அன்பு நமக்கு தேவை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அனைவருக்குமான ஒரு சிறந்த நாளுக்காக இன்றே செயல்படுங்கள்: புலம்பெயர்ந்தோரின் ஆரோக்கியத்தை மேம்படுத்துங்கள் என்ற கருப்பொருளில் புலம்பெயர்ந்தோர் பன்னாட்டு நாள் கொண்டாடப்படுகின்றது.

அமெரிக்கா அதிக அளவு புலம்பெயர்ந்தோரைக் கொண்டுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. அதாவது அமெரிக்காவில் வாழும் மொத்த மக்கள் தொகையில் 15 விழுக்காட்டினர் புலம்பெயர்ந்தோர். அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக, ஜெர்மனி மற்றும் சவுதி அரேபியா இப்பட்டியலில் அடுத்த இடத்தைப் பெறுகின்றன.

வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்தவர்களை அதிகமாக கொண்டுள்ள நாடுகளில் இந்தியா முதலிடத்தையும் அதனைத் தொடர்ந்து மெக்சிகோ மற்றும் இரஷ்யாவும் இடம்பெற்றுள்ளன.

இடம்பெயர்வு புலம்பெயர்வு என்பது எப்போதும் மனித வரலாற்றின் ஒரு பகுதியாக இருந்து வருகிறது. பல்வேறு காரணங்களுக்காக தனிநபர்கள் மற்றும் குழுக்கள் இடம்பெயர்கின்றனர். சிறந்த வாய்ப்புகளைத் தேடியும், வாழ்வாதரத்தை நாடியும், மோதல்கள், வன்முறை, காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் சீர்கேடு ஆகியவற்றிலிருந்து தப்பிக்கவும் பலர் தங்களது சொந்த நாட்டை விட்டு வேறு நாடுகளுக்கு புலம்பெயர்கின்றனர்.

ஏழை நோயாளிகளுக்காக உருவான ஆரைடடை மருத்துவமனை

"Francesco Miulli" மருத்துவமனையானது சமூகம் மற்றும் ஏழை நோயாளிகளின் நலனுக்கான நலவாழ்வுப் பணியை எப்போதும் மேம்படுத்தும் ஒரு நல்ல சூழலை வளர்க்கின்றது என்றும், அதன் சுற்றுப்புறம் மற்றும் தேசிய அளவில் ஒரு விலைமதிப்பற்ற வளமாகத் திகழ்கின்றது என்றும் கூறினார்.

டிசம்பர் 18 திங்கள் கிழமை வத்திக்கானின் கொன்சிஸ்தோரோ அறையில் இத்தாலியின் "Francesco Miulli" மருத்துவமனையின் பிரதிநிதிகளை சந்தித்தபோது இவ்வாறு கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பணியின் தரம், மக்களின் வாழ்வில் கவனம் செலுத்தும் பாதை போன்றவற்றில் தொடர்ந்து முன்னேறிச் செல்லவும் அவர்களுக்கு அழைப்புவிடுத்தார்.

புலம்பெயர்ந்தோருக்கான மருத்தகக் கட்டிடம் திறக்க இருப்பது குறித்து எடுத்துரைத்து அவர்களை பாராட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், Francesco Miulli மருத்துவமனையில் பணியாற்றும் ஆயிரக்கணக்கான பணியாளர்கள் அர்ப்பணம் நிறைந்த மனதுடன் பணியாற்றுகின்றார்கள் என்றும் கூறினார்,

மேலும், மனிதர்களை முன்னிலைப்படுத்துதல், அறிவியல் ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல் போன்றவற்றில் தொடர்ந்து உற்சாகத்துடன் செயல்பட வேண்டும் என்று கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மனிதர்களை முன்னிலைப்படுத்தும் பணி

ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முன்பு, ஏழை நோயாளிகளுக்கான மருத்துவமனையாக உருவான ஆரைடடை மருத்துவமனை, பாதிக்கப்பட்டவர்கள், அடைக்கலம், உதவி மற்றும் வரவேற்பு நாடுபவர்களுக்கு அதனை வழங்கும் பாதுகாப்பான இடமாக இன்று வரை விளங்குகின்றது என்றும், மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் (மத்தேயு 25:40) என்ற நற்செய்தி வரிகளுக்கு ஏற்ப, பணியில் ஏழைகளை முன்னிலைப்படுத்த வேண்டும் என்றும் கூறினார் திருத்தந்தை.

ஏழை நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் அதன் கட்டமைப்புக்கள் போன்றவற்றைப் புதுப்பித்ததன் வழியாக ஆற்றல் மிக்கவர்களாகத் தொடர்ந்து பணியாற்றுகின்றார்கள் என்று அவர்களை வாழ்த்திய திருத்தந்தை அவர்கள், 600 க்கும் மேற்பட்ட படுக்கை வசதிகள், அறுவை சிகிச்சை அறைகள், இயந்திரங்கள் போன்றவற்றுடன் புதிய மருத்துவமனை உருவாகியுள்ளது குறித்தும் எடுத்துரைத்தார்.

**அறிவியல் ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல்**

இத்தாலியப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பல ஆண்டுகால அறிவியல் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வரும் மியுலி மருத்துவமனை, பல்வேறு முன்னேற்றங்களை அடைந்துள்ளது என்றும், முதுகலைக்கல்வி, பால்டெக்னிக் கல்வி என வளர்ந்து உயர்மட்ட தொழில் வல்லுநர்கள் இத்தாலியில்

வந்து செயல்பட ஊக்குவிக்கும் வகையில் பரந்த எல்லைகளுடன் திறன்களை வளப்படுத்துகின்றது என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

**சுடர் விடைகள்**

1. புனித சவேரியார்
2. ஆண்டவர் விரும்புகிறார்
3. குவாதலூப்
4. ஆகாததம்மாள், புனித லூசியாவிற்கு சொன்னது
5. கான்டி நகர் புனித ஜான்
6. எபேசுவில், நூறாம் ஆண்டில்
7. பெத்லகேம்
8. சேவியர் அரண்மனை
9. அமைதியின் மெழுகுதிரி
10. மெக்சிகோவில் உள்ள தெபேயாக் மலை
11. புனித ஆகத்தம்மாள்
12. ஜாஜிலோனியன் பல்கலைக் கழகம்
13. புனித யோவான்
14. ஞானிகள், ஏரோதிடம் கூறியது
15. பொது நலத்திற்கான விருதை பெற்றார்

அன்பான தீபகத்தின் செபத்திருப் பயணிகளே,

திருத்தந்தை பிரான்சிஸ் வரும் 2024ம் ஆண்டை "செபத்தின் ஆண்டாக கத்தோலிக்க திருஅவைக்கு அறிமுகப்படுத்தியிருக்கின்றார். இந்த புதிய ஆண்டை இறைமக்கள், தனிநபராகவும், குடும்பங்களாவும், நண்பர்களாகவும், இவ்வித நிலைகளெல்லாம் செபம் செய்து செபத்தின் வல்லமையையும், நன்மையையும் நமது வாழ்வில் பெற்று உலகிற்கு அறிவிக்க நம்மை அழைக்கின்றார்.

இவ்வாண்டை செபத்திற்காக அற்பணிக்க அழைக்கும் நம் திருத்தந்தை அற்பணிக்க அழைக்கும் நம் திருத்தந்தை இதற்கான ஒரு திட்டத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளார். குறிப்பாக ஆயர்கள், குருக்கள், துறவியரை சிறப்புத்திட்டங்களை உருவாக்கவும், அறிவிக்கவும், செயல்படுத்தவும் அழைக்கின்றார். குறிப்பாக மறைக்கல்வி மற்றும் மறைப்பரப்பு பணிகுழுக்களை " " செபத்திருப்பயணம், "மன்றாட்டுத் திருப்பயணம்" இத்திருப்பயணத்தை மறைமாவட்ட அளவிலும், கல்வி நிலையங்களிலும், மற்றும் பங்குகளிலும் திட்டமிட்டு செயல்படுத்தவும் நம்மை அழைக்கின்றார்.

நமது தீபகம் மறைப்பரப்பு நிலையம் நமது சலேசிய மாநிலத்தின் ஆறு பிரிவுகளில் இத்தகைய செபவாழ்வை மையப்படுத்தி மக்களை இளைஞர்களை குழந்தைகளை செபிக்கவும், கொண்டாடவும், ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது. வேலூர் மண்டலம், திருப்பத்தூர் மண்டலம் இத்தகைய செபவாழ்வின் கொண்டாட்டங்களை மிகவும் சிறப்பாக செய்துள்ளது. வருகின்ற ஆண்டில் புதுச்சேரியில் இந்த செபத்தின் கொண்டாட்டம் பிப்ரவரி 4ம் தேதியும், தவக்காலத்தின் புனித சவேரியார் பிராட்வே பங்கிலும், உயிர்ப்பின் கொண்டாட்டம் புனித லூர்து அன்னை திருத்தலம், பெரம்பூரிலும் நடைபெற உள்ளது.

இறைமக்களாகிய நாம் திருத்தந்தையோடு தம் செபத் திருப்பயணத்தில் இணைந்து, நமது வாழ்வை செம்மையாக்கி வாழ்ந்து, தொடக்கத் திருஅவைப்போல செபமே வாழ்வு என வாழ அன்போடு உங்களை அழைக்கின்றேன். புனித தொன் போஸ்கோ எப்போது செபித்தார் என்ற கேள்வி எழுந்தபோது தொன்போஸ்கோ எப்போது செபிக்கவில்லை என கேள்வி எழுப்பி தொன் போஸ்கோ செபமே வாழ்வு, வாழ்வே செபம் என வாழ்ந்துக் காட்டினார்.

கடவுளின் தாய் மரியாள் தன் வாழ்நாளலெல்லாம் இறைவார்த்தையை மனதில் நிறுத்தி, சிந்தித்து, செபித்து வாழ்ந்தார் என நாம் அவருடைய வாழ்க்கையில் அறியலாம். புனித தொன் போஸ்கோவைப் பின்பற்றி அன்னை மரியாளின் அருட்துணையோடு நமது வாழ்வை செபமாக்கி எப்போதும், என்ன செய்தாலும் செபத்துடன் கூடிய திருப்பாடல்களையும் செபங்களையும் பக்தியுடன் செய்து வாழ்ந்து இறையருளைப் பெற்று பிறரையும் இறைவனிடம் அழைத்துச் செல்ல இவ்வாண்டு நமக்கு உதவட்டும்.

அனைவருக்கும் தீபகத்தின் செபங்களும், ஆசீரும், இவ்வாண்டு முழுவதும் உங்களை வழிநடத்தட்டும். அனைவருக்கும் 2024ம் ஆண்டிற்கான புத்தாண்டு ஆசீர்.